உ

சிவமயம்.

# [illegible]சிராத்தவிதி.


இது

யாழ்ப்பாணத்து

மாதகல்

க. [illegible]ரய்ய ஐயரவர்கள்

செய்தது.



கொக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ரௌத்திரி [illegible]

1920.

உ

# சிவசிராத்தவிதி.

வருணாச்சிரம தருமபரிபாலன சைவசமயிகளுக்குத் தீக்ஷையேமோட்சசாதனமாயுள்ளது. யாவராயினுந் தீக்ஷை பெற்று அனுட்டான செபதியானமில்லாதவிடத்து அவர் சைவசமயிகளாகார். ஆதலினால் யாவரும் சமயதீக்ஷைபெற்றுச் சமயிகளாகியும், விசேடதீக்ஷைபெற்றுப் புத்திரராகியும், நிருவாணதீக்ஷைபெற்றுச் சாதகராகியும், அபிடேகம் பெற்று ஆசாரியராகியும், ஞானதீக்ஷைபெற்றுச் சிவஞானிகளாகியும் ஒழுகுதல்வேண்டும். சரியைத்தொழில்செய்வார் சாலோகத்தையும், கிரியைத்தொழில்செய்வார் சாமீபத்தையும், யோகத்தொழில்செய்வார் சாரூபத்தையும், ஞானத்தொழில்செய்வார் சாயுச்சியத்தையும் அடைவரென்பது வேதசிவாகமத் துணிபாம்.

இந்தப்பகுப்புடையவர் யாவரும் தந்தை தாயாரைச் சுட்டிய ஞாபகசின்னமாகிய அமாவாசி பௌரணிமை விரத தருப்பண சிராத்த மகாளயமாதிய பிதிர்கருமங்களைத் தவறாது செய்யவேண்டும்.

தருமராசன் நச்சுநீரருந்தி இறந்த தம்பிமார்களில் அதிபராக்கிரமசாலிகளாகிய வீமனையும் விசையனையும் விட்டுச் சகாதேவனை யெழுப்பியது அவன் தாயாகிய மத்திரியின் கடன்செய்யவென்றும், இரணியன் யுத்தகளத்திலே மாறிப் புறங்கொடுத்து மறைந்தது தந்தைதாயாதியர் கடன்செய்யவென்றும், அறவொழுக்கம்பூண்ட அகத்தியமுனிவர்

லோபாமுத்திரையை வேட்டுச் சித்தனென்பவனைப்பெற்றது பிதிரர்கடன்செய்தற்கென்றும் பல சுருதிகளும் ஆன்றோ ராட்சியுமிருத்தலாலும், பஞ்சமகாயாகங்களில் பிதிர்யஞ்ஞ இன்றியமையாததென்பதை விளக்கத் "தென்புலத் தெய்வம்" என முற்கூறியதனாலும் சைவசமயிகள் யாவருக்கும் பிதிரர்கடனே அத்தியாவசியகமென்பது பெறப்பட்டது.

ஒவ்வோருயிர்களும் சாணளப்பான் புழுப்போல முன்னுடம்பு விட்டவுடன் மற்றோருடம்பெடுக்கினுமெடுக்கும். புண்ணியமிகுந்திருப்பின் உடனே சுவர்க்காதி புண்ணிய லோகங்களிற்போய் இன்பமனுபவிக்கினும் அனுபவிக்கும். பாபமிகுந்திருப்பின் உடனே நரகங்களிலேபோய்ப் பெருந் துன்பங்களை அனுபவிக்கினும் அனுபவிக்கும். சிலகாலம் பின்னிட்டுக் கன்மம் பக்குவப்பட்டுவரும்வரையும் பூலோகத்திலும் யமலோகத்திலுந் திரிந்துழன்று பக்குவப்பட்ட கன்மங்கள் செய்யுங் கிரியாபலன்களை நேரேநின்றேற்றுப் பின்னர்ச்சென் றனுபவிக்கினு மனுபவிக்கும்.

இங்ஙனமாக யாதொரு இடத்துக்கு அவசியம்போகு முயிர்கள் உடம்பைவிட்டபின் சூக்குமசரீரத்தோடு யமலோகஞ்சென்று பிரமதண்டம்பெற்றுத் தான்செய்த கன்மங்களை விளங்கி அதற்குத் தக்கபடியான போகங்களை அனுபவிக்கவிரும்பித் தென்பூமியினுள்ள எண்கோடி பிதிர்தேவர்களுள்ளே ஒருவகுப்பினரிடத்திற் றனது அதிகாரத்தைக் கொடுத்து "ஓ பிதிரர்காள், என்னைநோக்கி எனது வழியினுள்ளார் செய்யுங் கருமபலனை வாங்கி எனக்குரிய பாகத்தை நானெங்கேசென்றிருப்பினும் அங்கே அவன் அவள் அது முன்னிலையாகப் பெறும்படி செய்யுங்க" ளென்று ஒப்பித்து உத்தரவுபெற்றுச் செல்லும்.

௧. உக்கிராந்தி கோதானத்தால் உக்கிரனுடைய வேதனை தீரும்.

௨. தருமகோதானத்தால் பலபாவங்கள் நீங்கிப் புண்ணியப்பேறுண்டாகும்.

௩. வைதரணிகோதானத்தால் வைதரணியாற்றின் வேதனை தீரும்.

௪. பூமிதானத்தினல் நல்ல சுத்தமான இடங்கிடைக்கும்.

௫. எள்ளுத்தானத்தினல் பலபாவங்கள் நீங்கி விட்டுணுலோகங் கிடைக்கும்.

௬. பொன்தானத்தினல் அளவிறந்த புண்ணியங்களும் ஆபரணங்களுமுண்டாம்.

௭. நெய்த்தானத்தினல் தாசநீங்கும்.

௮. வஸ்திரதானத்தினல் குளிர், காற்று, வெய்யில், பனிமுதலியவற்றுல்வருந் துன்பங்கள் நீங்கிப் பெருமையும் அபிமானமுமுண்டாம்.

௯. தானியதானங்களினல் பலவித தானியப்பேறு முதலிய சுகமுண்டாம்.

௧0. சற்கரைத்தானத்தினல் சுகபோசனமுதலிய நன்மையுண்டாம்.

௧௧. வெள்ளித்தானத்தினல் எழுவகை லோகாதிசுகமுண்டாம்.

௧௨. உப்புத்தானத்தினல் அறுசுவைப் போசனசுகமுண்டாம்.

௧௩. நவரத்தினதி தானங்களினல் நவக்கிரகானுக்கிரகமுதலிய சுகமுண்டாம்.

கச. சிவலிங்கம், விபூதி, உருத்திராட்சம், சாளக்கிராம முதலிய தானங்களினுல் சிவஞானசித்தி முதலிய நன்மை யுண்டாம்.

கரு. கம்பளம், துலாபாரம், சாயாதானம் முதலிய வற்ருல் பலவித தீராவியாதிகள் நீங்கும்.

கசு. மிருத்தியுஞ்சயதானத்தினுல் மரணம் நீங்கும்.

சூரணோற்சவத்தினுல் சரீரசுத்தியுண்டாய்ச் சிவாக் கினிதீண்ட யோக்கியமாகும். நக்கினதானத்தினுல் இலச் சை அபிமானம் நீங்கும். அத்திசஞ்சயனத்தால் புண்ணிய தீர்த்தபலனுண்டாகும்.

அந்தியேட்டியினுல் மந்திர தந்திர கிரியா லோபங்க ளும், காலாதீதக் குற்றங்களும் நீங்கும்.

பாஷாணதாபனேத்தியாபனத்தால் கல்லு மலைகளா ய்க் கிடத்தலொழியும்.

நவசிராத்தத்தினுல், தாக உட்டணங்கள் நீங்கிச் சரீரம் வளரும்.

ஏகோத்தரவிருத்தியினுல் தத்துவ அசைவுகளும், சரீர புஷ்டியுமுண்டாம்.

சுரோதகும்பத்தினுல் சுகவிருத்தியும், நற்குணமும், நல்லழகுமுண்டாம்.

சங்கிதையினுல் மந்திரசித்தியுண்டாம்.

விருஷபதானத்தினுல் பிசாசத்துவம் நீங்கும்.

ஏகோதிட்டத்தினுல் பிரேதத்துவம் நீங்கும்.

மாசிகத்தினுல் சரீரம் வளரும்.

சபிண்டியால் சமானதேகமுண்டாம்.

சுவர்க்கபாதேயத்தால் சுவர்க்கவழியுண்டாம். மேலுஞ் செய்யவேண்டிய தானதருமபலன்களால் பெரும்பாவங்கள் நீங்கிப் புண்ணியப்பேறுகள்பலவுமுண்டாம்.

சிவஞானிகள் தத்துவாதீத சிவசாயுச்சியப்பேறடைவர்.

வேதாகமவிதிகளை யனுசரிக்கும் வைதிகசைவர் ஈச சதாசிவ சாந்தப்பேறடைவர்.

வேதவிதியை யனுசரிக்கும் வைதிகர் வசு ருத்திர ஆதித்தப்பேறடைவர்.

ஆகமவிதியைமாத்திரமனுசரிக்குஞ் சுத்தசைவர் கந்த சண்ட கணுதீசப்பேறடைவர்.

எங்கெந்தவிதமாகிய தீக்ஷை அனுட்டான பரம்பரையுண்டோ அந்தந்தமுறைப்படி அனுசரிக்கவேண்டும். மாறி அனுசரிப்பது குற்றம்.

சிராத்தம் தருமவழியால் வந்தபொருளைப் பிதா பிதாமகர் பிரபிதாமகர் மாதா பிதாமகி பிரபிதாமகி என்னுந் தகப்பன் பேரன் பீட்டன் தாய் பேத்தி பீட்டி என்னும் அறுவருக்கும், இதன்மேல் தலைமுறையாருக்கும் தன்வழியில் அனுதமாயிறந்தவருக்கும் பிரீதியாகச் "சர்வேஷாங் காருண்ய பித்ரே நம" என்று எழுவருக்கும், இஷ்டபந்துக்களுக்கும், குரு குருபத்தினி முதலியோருக்கும் பிரீதியாகச் செய்யுமொரு கிரியை.

தான்குறித்துச் செய்யுமுறையுடையவர் மோக்ஷமடைந்திருந்தால் செய்தபலன் தனக்கும்,

கருமவசத்தால் தேவகணமாயிருப்பின் அக்கினிமூலமாயும், அசுரகணமாயிருப்பின் தக்ஷிணைமூலமாயும், மனுடராய்ப் பிறந்திருப்பின் மானுடபோசனத்தினாலும், பிசாச

கணமடைந்திருப்பின் காகபலியினுலும், பிரேதத்துவமடைந்திருப்பின் அன்னமுதலியவற்றைச் சிந்துதல் விகிரமுதலியவற்றினுலும், யமலோகத்திருப்பின் பிண்டத்தினுலும், நரகத்திருப்பின் திலதருப்பணத்தினுலும், மிருகமாகப்பிறந்திருப்பின் பசுவுக்குப் புல்லிடுதலாலும், பறவையாய்ப்பிறந்திருப்பின் காகபலியினுலும், ஊர்வனவாகப்பிறந்திருப்பின் குறுணிசிந்துதல் முதலியவற்றினுலும், நீர்வாழ்வனவாகப் பிறந்திருப்பின் கங்கையாடுதல் கடலை அரிசி அன்னங்களிறைத்தலினுலும், தாவரமாகப்பிறந்திருப்பின் பூஞ்சோலை முதலிய வைத்து வளர்த்தலினுலும், வேறுவேறு பதவிகளையடைந்திருப்பின் விளக்கிடுதல் விரத உபாசனைகளினுலுந் திருத்தியுண்டாகிப் பெருமையடைவர்.

சிவதீக்ஷையொன்றே மோக்ஷத்திற்குக் காரணமாதலாலும் அந்தியேட்டியும் பிராயச்சித்தமாதலாலும் பூரணுகுதியோடு மோக்ஷமடைய, பின்னுற் செய்யும் மற்றைய கிரியைகள் வீணுகுமெனின்? அற்றன்று. இவ்வுயிர் இன்னபதவியை இன்னபிறவியை அடைந்திருக்குமென்ற உண்மை தெரியாமையாலும், இந்தச் சிராத்தத்திலே உபாசிக்கப்பட்ட தேவர்கள் பரமசிவாதிட்டான பிரதிரூபங்களாகிய அநந்த சதாசிவ விசுவதேவரும், நந்தி மகாகாளவிசுவதேவரும், ஈச சதாசிவ சாந்தபிதிரரும், கந்த சண்ட கணுதீசபிதிரரும், வசு •ருத்திர ஆதித்தபிதிரரும் ஆகிய பிதிர்தேவர்களைப் பாவித்துச் செய்யுஞ் சகல உபசாரங்களும் பரமசிவப்பிரீதியாகச் செய்யப்படுகையாலும், பிதிர்கள் விசுவதேவரிடத்திலும், விசுவதேவர் பரமசிவனிடத்திலும் ஒடுக்கம்பெறுதலினுலும் இச்சிராத்தக்கிரியை செய்யப்படுபவரும், செய்தவருஞ் சிவபுண்ணியப்பேற்றை எங்கே என்னவாக இருந்தாலும் பெற்றின்புறுவரென்பது சிவாகமத்துணிபு.

ஆதலால் யாவருக்காயினுஞ் சிராத்தஞ்செய்தல் அவசியம். சிராத்தஞ்செய்யப்பெருதவர் நற்கதியடையமாட்டார். இதுபற்றியே புத்திரனில்லாதவருந் தத்தபுத்திரனைப் பெற்று வளர்ப்பது. "மெய்தானம்வண்மைவிரதம் தவம் வேள்விகளுஞ் செய்தாலுஞாலத்தவர் நற்கதிசேரமாட்டார்" "மென்பாலகரைப் பயவாதவர் நாளும் மெய்மையாகத் தென்பாலவர்தம் பசித்திநனிதீர்க்கமாட்டார்" என்பதனுனும், "தம்பொருளென்ப தம்மக்களவர்பொருள் தந்தம்வினையான்வரும்" என்பதனுனுமறிக.

சிராத்தம் விதிப்படிசெய்யப் பொருளில்லையானல் யாசித்தாயினுஞ் செய்க. அதுவுமியலாதவிடத்துப் பிண்டதருப்பணமாவது செய்க. அதுவுமியலாதவிடத்துப் பசுக்களுக்கு அறுகம்புல்லாயினுமிடுக. அதுவுமியலாதவிடத்து வெளியே சென்று "என்குலப் பிதிரர்களே? யான் யாதுமிலேன்; என் பிழைகளைப்பொறுத்து எனக்கு ஆசிர்வதியுங்கள்" என்று வேண்டுக.

இறந்தவர்களுடைய திதிகளிலே சிராத்தஞ்செய்யவியலாதவர் மகாளயமாவது தவருது செய்தல்வேண்டும்.

## மகாளயம்.

தேவர்களுக்கு உத்தராயணமாகிய தைமாதஞ் சூரியோதயமாகிச் சித்திரை உச்சிக்காலமாய் ஆனி அஸ்தமயனமாகும். ஆடி இரவுதொடங்கி மார்கழி விடியற்புறமாதலால் புரட்டாதி இரவு பத்துநாழிகைதொடக்கமாகும்: அதில் அபரபக்கமே சிறந்த மகாளயபக்ஷமெனப்படும். அதில் செய்யுஞ்சிராத்தம் இராப்போசனமாகும். யாவருக்கும் பகற்போசனந் தவறினும் இராப்போசனந் தவறப்படாது. அவரவர் இறந்த திதி மத்தியானபோசனமும்,

மகாளயம் இராப்போசனமுமாகும். ஆதலால் திதி சிராத்தந் தவறினும் மகாளயசிராத்தந் தவறலாகாது.

"அன்னைபிதாமாண்டதினத்தாற்றலிலையானுமறுதியாக என்னவிலையானுமகாளயமாஞ்சிராத்தவினையியற்றல்வேண்டும்."

இந்த மகாளயசிராத்தம் ஆவணி அபரபக்ஷந்தொடங்கிக் கார்த்திகை அமாவாசிவரையுஞ் செய்யலாம். இதன் விரிவையும் இன்ன இன்ன திதிகளிற் செய்தால் இன்ன இன்ன பேறுண்டாகுமென்பதனையுஞ் சேதுபுராணவசனதுராசாரச்சருக்கத்தில் அறிக.

## சிராத்தாதி கிரியைசெய்யுங் கர்த்தா.

யாவருக்கும் தமது மூத்தபுத்திரனே விசிட்டம். அவனின்றேல் மற்றையபுத்திரரும், அவருமின்றேல் தத்தபுத்திரனும், அவனுமின்றேல் சபிண்டராயுள்ளவருள் இஷ்டவிசுவாசமுடையவனும், அப்படியுமின்றேல் சகோதரனும், அவனுமின்றேல் மாதாவின் சகோதரனும், அவருமின்றேல் இவர்கள்புத்திரரும், மனைவி அல்லது மகள் மந்திரமில்லாமலும், மகள்புத்திரன் புத்திரிகளும், புரோகிதனும், குருவும், அரசனும் செய்க. சபிண்டர் - ஞாதியர்.

தன்கோத்திரமல்லாத பிறருக்கும், புத்திரனில்லாத பெண்களுக்குங்கிரமத்திலெல்லாக்கிரியைகளுஞ்செய்து சபிண்டிகரணமாவது சிராத்தமாவது ஏகோதிட்டம்போலச் செய்து ஏகபிண்டமிட்டுத் தருப்பிக்க. தகனாதிகருமங்கள் அந்தந்தச் சாதியார்களேசெய்க: இது கிரமக்கிரியையாம்.

இனி அக்கிரமக்கிரியையாவது: தகப்பன் தாய் பிள்ளைகளுக்குச் செய்தலும், தமையன் தம்பிக்குச் செய்தலும்,

மாமன் மருமகளுக்குச் செய்தலுமாக மூத்தவர் இளையோர்களுக்குச் செய்வது. அங்ஙனஞ்செய்யுங்கால் முன்மூன்று பிதிர்வருக்கங்களிற் சேராது தங்களுக்குள்ள முறையையும் அவர்கள் பேரையுஞ் சொல்லி "அநாதபித்ரே? இதமாமம், இதம் பிண்டம், இதந் திலோதகம்" என்றும், "சர்வேஷாங் காருண்யபித்ரே? இதமாமம் இதம் பிண்டம், இதந் திலோதகம்" என்றுங் கிரியைகளை முடிக்க. இதுவே இவர்களுக்குச் சபிண்டி. இவர்களுக்கு முறையுடையவர்களாய்ச் செய்யவந்த பின்பு அந்த இடத்தினின்றுமெடுத்துத் தமது முப்பிதிர்வருக்கத்தோடு சேர்த்துப் பூசித்துச் சிராத்தஞ் செய்க.

சிராத்தஞ் செய்யுங் கருத்தா, சிராத்ததினத்திலும் முதனளிலும், வழிநடத்தல், எண்ணெயிடல், பரான்னம் புசித்தல், போகஞ்செய்தல், மயிர் நகங் களைதல், வேறுசிராத்தங்களில் வரிக்கப்பட்டுத் தானமேற்றல், பாரஞ்சுமத்தல் முதலியன செய்யாமல் இவரே பிதிர்தேவர்களென்று சிந்தித்து விரத நியமம்பூண்டிருத்தல்வேண்டும்.

சிராத்தமேற்பவர் சிவார்ச்சனை செய்பவராய்க் குலாசாரமுறை பிறழாதவராய், நல்லொழுக்கமுடையவராய், அன்று நித்தியகருமம் முடித்தவராய், வேறுசிராத்தம் வாங்காதவராய், இன்னது வேண்டுமென்று கேளாதவராய்க் கொடுத்த பொருளிலே மிக்க திருப்தியுடையராய்த், தன்னிருதயத்திலேயிருக்குஞ் சிவபெருமானைத் தான் இப்பொழுது சுட்டப்படும் பிதிர்தேவரூபமாயிருந்து "இவனாற் செயப்படும் வழிபாட்டைத் திருப்தியாக ஏற்று இவனைக் குறித்தபடிக்குத் தேவரீர் நல்ல கதிகொடுக்கவேண்டும். இவனுக்குத் தீர்க்காயுசுவும், செல்வப்பெருக்கமும், சந்தான

விருத்தியும், அரோகதிடகாத்திரமும், சிவஞானமுஞ் சிந்திதமனோத நன்மையுமுண்டாக அனுக்கிரகிக்கவேண்டும்" என்று தியானித்தல்வேண்டும்.

பொருளாசையாலே "இவன் இன்னுமதிகமாகத் தந்தாலென்ன" என்று குறைபேசித் தனக்கென்று வாங்குதலும், கொடுப்பவன் "நம் பிதிர்தேவருக்கன்றி இந்தப் பிராமணனுக்குக் கொடுக்கிறேன்" என்று கொடுத்தலும் பயனற்று நரகத்துக்கேதுவாகும்.

இருவருந் தமக்குரிய ஒழுங்குதவறி நடப்பாரானால் தவறாது நரகடைவர்.

சிவதீக்ஷை, சிவார்ச்சனையில்லாதவரைச் சிராத்தத்தில் வரிக்கலாகாது.

ஆமசிராத்தம் இரணியசிராத்தம் அன்றி அன்னசிராத்தத்தில் இருமுறை வரிக்கப்பட்டவர் தப்பாது நரகடைவர்.

இராத்திரியிலும், இரண்டுசந்திகளினும், பிராதக்காலத்திலும் சிராத்தஞ்செய்யலாகாது அபரான்னமே உத்தமம். மற்றைக்காலங்கள் மத்திமம்.

தாய் தந்தையர் இறந்த திதிகளினன்றி, அமாவாசி, பௌரணிமை, கிரகணம், அயனம், விஷு, வியதீபாதம், சன்மநட்சத்திரம், சற்பாத்திரங்களும், தக்கதிரவியங்கிடைந்தகாலம், புண்ணியதீர்த்தம் புண்ணியக்ஷேத்திரங்கிடைத்தசமையங்களினுஞ் சிராத்தஞ்செய்தலின்றியமையாதன.

எந்தக்காலமாயிருந்தாலும் ஆசௌசம்வந்தால் அதன் முடிபிலும், கருத்தாவின் மனைவி வீட்டுக்கு விலக்கானால் ஐந்தாநாளிலும், விதவை தன்னாயகனுடைய திதிகளில் வீட்டுக்கு விலக்கானால் ஐந்தாம் நாளினுஞ் சிராத்தஞ் செய்க,

## சிராத்த திரவியம்.

பச்சரிசி, சாமையரிசி, உழுந்து, சிறுபயறு, பெரும் பயறு, பயற்றங்காய், நரிப்பயறு, நீவாரம், யவம், கோது மையரிசி மா, எள்ளு, சற்கரை, வெல்லம், மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, லவணம், புளி, எள்ளு, தேன், தேங்காய், இளநீர், பாகற்காய், மாவிலை, மாங்காய், மாம்பழம், பலாக் காய், பலாப்பழம், வாழையிலை, வாழைக்காய், வாழைப்பழம், வாழைத்தண்டு, வாழைக்கிழங்கு, எலுமிச்சம்பழம், புடோ லங்காய், அவரைக்காய், கக்கரிக்காய், வெள்ளரிக்காய், முள் ளிக்காய், கண்டங்கத்தரிக்காய், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, ராசவள்ளிக்கிழங்கு, இஞ்சிக்கிழங்கு, சே ப்பங்கிழங்கு, சேப்பந்தண்டு, சேப்பங்கீரை, முன்னை, முசு ட்டை, அகத்தி, கீரை, கீரைத்தண்டு, காரை, பிரண்டை, கருவேப்பிலை, தூதுளையிலை, தூதுளங்காய், வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, பசுப்பால், தயிர், நெய் முதலியன.

சிராத்தத்துக்கு ஆகாததிரவியம்: வெங்காயம், வெள் ளைப்பூண்டு, வெண்கடுகு, கொள்ளு, கடலை, சுரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், கத்தரிக்காய், மான், ஒட்ட கம், எருமை, ஆடு இவற்றின்பால், தயிர், நெய் முதலாயின.

மிளகாய், பூசினிக்காய், கத்தரிக்காய் மத்திமப்பொ ருள். இவை சில நூலிலே தள்ளப்பட்டன.

## சிவசிராத்தவிதி.

சிராத்ததினத்தின் முதனாள் ஒருநேரம் பகலிலே போசனஞ்செய்து, சூரியாஸ்தமயனத்திலே நட்சத்திரந் தோன்றியபின்பு, நூல்களிலே சொல்லப்பட்ட இலக்கண மமைந்த சிவதீக்ஷிதர்களாகிய பிராமணர்களைத் தெரிந்து

கொண்டு தாம்பூலங்கொடுத்து வரித்துக்கொள்க. அன்றிராத்திரியிலே கோபந்தீர்ந்து சுத்தராகி இந்திரியங்களையடக்கிச் சிவபெருமானையே சிந்தித்துக்கொள்ளல்வேண்டும்.

பிதிர்கள்பொருட்டு ஆசாரியர் மூவரையும், விசுவதேவர்பொருட்டு நிருவாணதீக்ஷிதரிருவரையும் வரித்துக்கொள்க. அவரில்லாதவிடத்து விசேஷதீக்ஷிதரையேனும் சமயதீக்ஷிதரையேனுங் கொள்க.

சொல்லப்பட்ட இலக்கணமுடைய சிராத்தயோக்கியர்கள் கிடையாதபோது விசுவதேவர்பொருட்டு ஒருவரையும், பிதிர்கள்பொருட்டு ஒருவரையுங்கொண்டு கிழக்குமுகராகிய ஒருவருடைய வல இடத்தோளடிகளிரண்டில் விசுவதேவரிருவரையும், வடக்குமுகராகிய ஒருவருடைய வலத்தோளுச்சியும் தலையும் இடத்தோளுச்சியும் என்னுமிடங்களில் முறையே கந்தர் சண்டர் கணுதீசரென்னும் பிதிர்கள் மூவரையும் பூசிக்க. இருவருங் கிடையாதபோது ஒருவரையேகொண்டு ஒருவருடைய தோள்களிரண்டில் விசுவதேவரையும், தலைதோளுச்சிகளிற் பிதிர்களையும் பூசிக்க.

சிராத்ததினத்திலே வைகறையிலெழுந்து நித்தியகருமமிரண்டுமுடித்து அப்படியே நித்தியகருமமுடித்தவர்களாய் வந்த சிவப்பிராமணர்களை வைத்துக்கொண்டு வடக்குநோக்கியேனுங் கிழக்குநோக்கியேனும் இருந்து பவித்திரத்தை வலக்கையணிவிரலிலிட்டு, அதனோடு மூன்று கட்டைத்தருப்பையை மாட்டிப்பிடித்து எள்ளைத்தொட்டு, ஓம் கணபதயே நமவென்று குட்டி, ஓம் சிவகுரவே நமவென்று கும்பிட்டு விபரீதப் பிராணுயாமத்திரயம்பண்ணி, வலமுழந்தாளில் இரண்டுகையையும் பொத்திவைத்துக்கொண்டு சங்கற்பம்பண்ணித் தெற்குப்புறமாகக் கட்டைத்தருப்பைகளையும் எள்ளையும் எறிந்துவிட்டு,

"எங்கள் பிதிர்களுக்குச் சிராத்தஞ் செயற்பாலது இதில் நந்தியென்னும் பெயர்பெற்ற விசுவதேவஸ்தானத்திலும் மகாகாளரென்னும் பெயர்பெற்ற விசுவதேவஸ்தானத்திலும் தாங்கள் க்ஷணங்கொடுத்தருள்செய்க" என்று சொல்லி, இருவருக்கேனும் ஒருவருக்கேனும் தருப்பை கொடுத்து, எள்ளும் வெல்லமுங்கலந்த கிருசரமும் தாம்பூலமும் எண்ணெயும் சிகைக்காயும் எலுமிச்சம்பழமுங் கொடுத்துப் பின்பு பூணூலை அபசவ்வியமாக விட்டுக்கொண்டு "கந்தசுரூபராகிய எமது பிதாவின் பிதிர்ஸ்தானத்திலும், சண்டரூபராகிய எமது பிதாமகருடைய ஸ்தானத்திலும், கணநீசரூபராகிய எமது பிரபிதாமகருடைய ஸ்தானத்திலும் க்ஷணங்கொடுத்துத் தாங்களருள் செய்க" என்று சொல்லி மூவருக்கேனும் ஒருவருக்கேனும் தருப்பைகொடுத்து எள்ளும் வெல்லமுங்கலந்த கிருசரமும் தாம்பூலம் எண்ணெய் சிகைக்காய் எலுமிச்சம்பழமென்னும் இவைகளுங் கொடுத்து, அதிதி அப்பியாகதர்களுக்கும் அப்படியே கொடுத்து ஸ்நானம்பண்ணினவர்களாகப் பாவிக்க.

பின்பு வீட்டுமுற்றத்தைக் கோமயத்தால் மெழுகி அதிலே கிழக்குப்பக்கத்தில் ஒருமுழ அகல நீளங்கொண்ட சதுரச்சிர மண்டலமிரண்டு தெற்குவடக்காக விசுவதேவர் பொருட்டமைத்து, அப்படியே அவற்றிற்கு மேற்கே விருத்தமண்டலமிரண்டு பிதிர்கள்பொருட்டமைத்துவிட்டு நித்தியகருமமுடித்துவந்த அவர்களை உபசரித்துச் சாமானியார்க்கியங் கையிற்கொண்டு சதுரச்சிரமண்டலங்களில் அரிசிகளையும் வடக்குநுனியாகிய இரண்டு தருப்பைகளையும், விருத்தமண்டலங்களில் எட்களையும் தெற்குநுனியாகிய மூன்று தருப்பைகளையும் இட்டுத் தெற்குமண்டலங்களிலே [illegible]தசுத்தியின்பொருட்டு மிருத்திகையுமிட்டு அர்க்கியத்

தால் அஸ்திரமந்திரங்கொண்டு புரோக்ஷித்து, மல்லிகை முல்லைமுதலிய வெள்ளைப்பூக்களாலே தெற்குமண்டலங்களிலே அஸ்திரமந்திரத்தாலும் வடக்குமண்டலங்களில் இருதயமந்திரத்தாலும் அருச்சித்து, விசுவதேவரைத் தெற்குச் சதுரச்சிரமண்டலத்திலே கிழக்குமுகராகநிறுத்தி, ஓம் நந்திநேசுவாகா ஓம் மகாகாளய சுவாகா என்று சுவாகதார்க்கியங்கொடுத்து, வாமதேவத்தால் மிருத்திகைகொண்டு கால்களைக்கழுவி வடக்குச் சதுரச்சிரமண்டபத்தில் அவரை நிறுத்தி ஆசமனமும் அர்க்கியமுங் கொடுத்து, அபசவ்வியமாகப் பூணூல்பூண்டு தெற்குவிருத்தமண்டபத்தில் முறையே கந்தர்முதலியோரை மேற்குமுகராக நிறுத்தி முன்போலவே சுவதாந்தநாமத்தினல் எட்கூடின சுவாகாந்தார்க்கியங்கொடுத்து வாமதேவத்தினல் மண்கொண்டு கால்கழுவி வடக்கு விருத்தமண்டலத்திலே அவரை நிறுத்தி ஆசமனமும் அர்க்கியமுங்கொடுத்து அதிதி அப்பியாகதர்களையும் அங்கேயே கால்கழுவி ஆசமனமும் அர்க்கியமுங்கொடுத்து எல்லாரையும் உள்ளேபுகச்செய்து தானும் ஆசமித்து உட்புகுந்து தெற்குத்தாழ்ந்த சுத்தநிலத்திலே விசுவதேவரைத் தெற்குமுதல் வடக்குவரை கிழக்குமுகராகவும், பிதிர்களைக் கிழக்குமுதல்மேற்குவரை வடக்குமுகராகவும், அதிதியப்பியாகதர்களை மேற்குமுகராகவும் ஆசனங்களில் வாமதேவத்தால் இருத்துக. அதிதியாவான் முன்னறியப்படாது வந்தோன். அப்பியாகதனாவான் முன்னறியப்பட்டுவந்தோன்.

அங்ஙனமிருத்தியபின்பு விபரீத சகளீகரணஞ்செய்துகொண்டு தேவர்களுக்கும் பிதிர்களுக்குமாக விசேடார்க்கிய பாத்திரங்களிரண்டை அஸ்திரத்தாற் சுத்திசெய்து சிரசாற் சுத்தசலம் பூரித்துத் தேவபாத்திரத்தில் அரிசியும் பிதிர்பாத்திரத்தில் எள்ளுமிட்டுச் சத்தியோசாதத்தாற் சந்தனமும் சிகையால் அறுகும் புட்பமக்ஷதை கூட்டிய தருப்பை

பவுத்திரமுமிட்டு இருதயத்தால் அபிமந்திரித்துத் தேவ பாத்திரத்தைப் பிரதக்ஷிணமாகவும் பிதிர்பாத்திரத்தை அப்பிரதக்ஷிணமாகவும் இரக்ஷைசெய்து அஸ்திரமந்திரங்கொண்டு திரவியங்களைப் புரோக்ஷித்துச் சந்தனபுட்பதூபதீப வஸ்திரோபவீதமுதலியவற்றை இருதயாதி கவசாந்த மந்திரங்களால் அபிமந்திரித்துச் சிராத்தஞ்செய்யத்தொடங்குக.

சிராத்தஞ்செய்வேன் என்று அஞ்சலியஸ்தனாய்நின்று அவர்களைப் பிரார்த்தித்து, செய்யென்று அவர்கள் அநுமதி செய்தபின்பு, சவ்வியப் பூணூலிட்டு விசுவதேவரையே முன்னர்த் தனித்தனி பூசித்தல்வேண்டும்.

அதில் விசுவதேவருக்கு வடக்குநுனியாகிய தருப்பாசனத்தைச் சத்தியோசாதத்தாற் கொடுத்து ஆவாகிக்கின்றேன் என்று பிரார்த்தித்து ஆவாகிப்பாய் என்று அநுமதி செய்தபின்பு, ஓம் நந்தியாசனாய நம ஓம் நந்திமூர்த்தையே நம ஓம் நந்திநே நம, ஓம் மகாகாளாசனாய நம ஓம் மகாகாளமூர்த்தையே நம ஓம் காளாய நம என்று பூசித்து ஆவாகித்து வாமதேவத்தாற் ரூபனமும் சந்நிதானமும் சந்நிரோதனமுஞ் செய்து இரக்கையின்பொருட்டு அரிசியை வாமதேவத்தால் வலமாகச்சிதறி அவர்களுடைய அஞ்சலியிலே சந்நிதானார்க்கியத்தை அகோரத்தாற் கொடுத்து அதைப் பாத்திரத்திற்கொண்டு வைத்துவிட்டு முழந்தாளூன்றிநின்று கால்கடொடங்கி முடிவரையும் அரிசியால் அகோரமந்திரங்கொண்டு தூவி வாமதேவத்தாற் சந்தனம் பூசிப் புட்பமட்சதை மாலைகளால் அலங்கரித்து அகோரத்தாற் றூபதீபங்களும் ஈசானத்தால் வஸ்திரம் பூணூல்முதலியனவுங் கொடுத்துவிடுக.

அதன்மேல் அபசவ்வியப் பூணூல்பூண்டு இருமடங்கு தருப்பைகளைத் தெற்குநுனியாக்கிச் சத்தியோசாதத்தாற்

பிதிர்கட்கு ஆசனமாகக்கொடுத்து முன்போலப் பிரார்த்தித்து அநுமதிபெற்றுக் கிழக்கேதொடங்கிக் கந்த சண்ட கணுதீசர்களை, ஓம் கந்தசுரூபபிதிராசனாய நம, ஓம் கந்த சுரூபபிதிர்மூர்த்தயே நம, ஓம் கந்தாயபிதிரே நம, ஓம் சண்டசுரூபபிதாமகாசனாய நம, ஓம் சண்டசுரூபபிதாமக மூர்த்தையே நம, ஓம் சண்டாயபிதாமகாய நம, ஓம் கணுதீச சுரூபபிரபிதாமகாசனாய நம, ஓம் கணுதீசசுரூபபிரபிதாமக மூர்த்தையே நம, ஓம் கணுதீசாயை பிரபிதாமகாய நம என்று பூசித்தாவாகித்து வாமதேவத்தாற் றூபனமுதலிய மூன்றுஞ்செய்து எட்களால் இடமாக ஈசானங்கொண்டு இரட்சைசெய்து ஈசானத்தாற் சந்நிதானுர்க்கியங்கொடுத்து முழந்தாளூன்றிநின்று முடிமுதலடிகாறு மெட்களை ஈசான த்தாற்றூவி வாமதேவத்தாற் சந்தனம்பூசிச் சம்பகந் துளசி தாமரை புன்னை முதலியவற்றினாய புட்பமாலைகளாலலங் கரித்து அகோரத்தாற் றூபதீபங்களும் ஈசானத்தாற் பவித் திரம் வஸ்திரம் பூணூல் முதலியனவுங் கொடுத்துவிடுக.

அதிதியப்பியாகதர்களை ஓம் அதிதியாசனாய நம, ஓம் அதிதிமூர்த்தையே நம, ஓம் அதிதியே நம, ஓம் அப்பியாக தாசனாய நம, ஓம் அப்பியாகதமூர்த்தயே நம, ஓம் அப்பியாக தாய நம என்று பூசித்து ஆவாகித்து முன் விசுவதேவருக் குச் செய்தாற்போலத் தாபனமுதலியனவெல்லாஞ் செய்க. அர்க்கிய சல நிர்மாலியபாத்திரத்தை நிருதிதிக்கிலே பிதிர் ஸ்தானமஸி என்று கவிழ்த்துவிடுக.

விசுவதேவர்களெதிரே சதுரச்சிரமண்டலங்களும், பிதி ர்களெதிரே விருத்தமண்டலங்களும், அதிதியப்பியாகதர்க ளெதிரே சதுரச்சிரமண்டலங்களுமிட்டு விபூதியினுலிரேகை கீறி அவற்றின்மேலே இலைகளைப்போட்டு அத்திரமந்திரத்தி

ஞலே அர்க்கியங்கொண்டு புரோக்ஷித்து நெய்யைத் தருப்பையாலெடுத்துப் புரோக்ஷித்து இரண்டு தருப்பையைப் பாத்திராஸனமாகக் கீழுமேலும்வைத்துத் தற்புருடத்தாற் பழமும் இஞ்சியும் வெல்லமும் வைத்து விசுவதேவர்களுக்கு ஒவ்வொருபிடி அரிசி யெடுத்துத் தற்புருடமந்திரத்தாலே படைத்துப் பிதிர்களுக்கு ஒவ்வொருபிடியரிசி யெடுத்துத் தற்புருடத்தால் மறித்துப் படைத்து அதிதியப்பியாகதர்களுக்கு விசுவதேவர்களுக்குப்போலப் படைத்துப் பாத்திரத்திலெஞ்சிய அரிசியைப் பிண்டத்துக்கும் சிராத்தகர்த்தாவுடைய பாகத்துக்கும் வைத்துக்கொண்டு கிழங்கு காய் கனி முதலிய பல சம்பாரங்களேயும் படைத்து நெய் முதலியனவெல்லாம் வைத்து விசுவதேவருடைய பாத்திரத்தைத் தேவார்க்கியத்தாற் புரோக்ஷித்து இருதயத்தாலபிமந்திரித்துக் கவசத்தாலர்க்கியசலங்கொண்டு வளைத்து இருதயத்தாலவர்கையிலுதகங்கொடுத்து அவர்களுடைய வலக்கைப் பெருவிரலை நிமிர்த்திய தன்கையாற் பிடித்துக் கவிழ்த்தி அரிசியைச் சங்கதமாக்கி வாமதேவத்தை உச்சரித்துத் தக்ஷிணையோடுகூடிய தாம்பூலத்தை அவரவர்மந்திரத்தால் சுவாகாந்தமாக அர்க்கியசலத்தோடு கூடத் தத்தம்பண்ணி அஞ்சலிசெய்து பின்பு பிதிர்களெதிரே முழந்தாளூன்றி அபசவ்வியப் பூணூலிட்டு இடக்கையாற் பாத்திரத்தைத் தொட்டுக்கொண்டு அஸ்திரத்தாற் பிதிரார்க்கியங்கொண்டு புரோக்ஷித்து இருதயத்தாலபிமந்திரித்துக் கவசத்தால் வளைத்து அவர்கள் கையிலுதகம் மறித்துக்கொடுத்துப் பதார்த்தங்களெல்லாவற்றையும் பரிசித்து அவர்களுடைய வலக்கைப் பெருவிரலை நிமிர்த்திய தன் கையாற் பிடித்துக் [illegible] அரிசியில் இருதயமந்திரத்தாலூன்றித் தக்ஷிணை [illegible]ம்பூலத்தை அவரவர் மந்திரத்தால் சுவா

காந்தமாக இடக்கையினுள்ளாக அர்க்கியசலத்தோடு கூட மறித்துக்கொடுத்து அஞ்சலிசெய்து சவ்வியப் பூணூலிட்டு அதிதியப்பியாகதர்களுக்குத் தருப்பை தக்ஷிணை சகிதமாகத் தருப்பைமேலாக ஏகதத்தம்பண்ணி நமஸ்கரித்து ... சாரஞ்சொல்லி அவர்களால் அநுஞ்ஞைபெற்று அகோர மந்திரத்திற் பத்துருச் செபித்து,

அதன்மேற் கோமயத்தால் மண்டலஞ்செய்து அதிலே வலது நுனித்தருப்பைகளைச் சத்தியோசாதத்தாற் பரப்பி வாமதேவத்தால் எட்களைச்சிந்தி அரிசியும் எள்ளும் உழுந்தும் பாலும் தேனும் பழமும் வெல்லமுங் கலந்து செய்த பிண்டத்தை வலமுழந்தாளூன்றித் தெற்கு முகமாய்நின்று சுவதாந்தமாகிய கந்தசண்டகணுதீச மந்திரங்களாற்றெற்கு வரைப் பிதிர்பொருட்டு மூன்றும் மாதிர்வர்க்கத்தின் பொருட்டு மூன்று மமைத்துப் பற்றுநீங்கக் கைகழுவி அதினுவிடமாக வாமதேவத்தை யுச்சரித்துச் சலதாரையொழுகிச் சந்தனமுதலியவற்றாற் பூசித்துப் பொறுத்தருளுகவென்று பிரார்த்தித்து உத்தியாபனஞ்செய்துவிட்டுத் தானுசமனஞ் செய்து பிதிர்கள்முதலாகிய அவர்கட்கு ஆசமனங்கொடுத்துத் தாம்பூலமும் இயன்ற தக்ஷிணையும் தேவர்முதலாகிய அவர்கட்கு அவரவர்க்குரிய தீர்த்தத்தோடுகொடுத்து அழிவின்மை பிரார்த்தித்துச் சிறிது சலத்தையள்ளிச் சுவதா என்று சொல்லுக. அவர்களும் அஸ்து சுவதா என்று சொல்லுக. அந்தச் சலத்தைப் பூமியிற்றெளித்துவிடுக. தேவர்களுருத்திரர்கள் பிதிர்கள் திருத்தியுடையர்களாகுக. என்று அவர்கள் சொன்னபின்பு எங்களுட் கொடையாளருஞ் சைவசந்ததியுமோங்கி வளருக. சிரத்தை... நீங்காதுநிற்க; கொடுக்கப்படும் பொருள்...

உண்டாகுக என்று விண்ணப்பஞ்செய்க, அவர்களும் உங்களுட் கொடையாளரும் என்று தொடங்கிச் சொல்லி யருளுக.

பின்பு நமஸ்காரஞ்செய்து பிதிர்பூர்வமாகச் சத்தி யோசாதத்தால் உத்தியாபனஞ்செய்துவிட்டு நிருதிதிக்கிற் கவிழ்த்திய பிதிர்பாத்திரத்தை நிமிர்த்தி உத்தியாபித்து அர்க்கியபாத்திரங்களையும் உத்தியாபித்து ஆசமனஞ்செ ய்து அவர்களைத் தனது சுற்றத்தாரோடு தானும் வலமாகப் பின்றொடர்ந்து புறத்தேயனுப்புக.

சிவசிராத்தவிதி முற்றிற்று.